தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

4.05.2013 A.M

## உழவர் பெருவிழாவில் மரக்கன்றுகள் வழங்கல்

புழல் ஒன்றியம் தீர்த்த கரியம்பட்டு ஊராட்சியில் வேளாண்மைத் துறை சார்பில் உழவர் பெருவிழா செவ்வாய்க்கிழமை நடந்தது.

புழல் வேளாண்மை உதவி இயக்குனர் ஜார்ஜ் மம்மன் தலைமை வகித்தார். ஒன்றியக் குழுத் தலைவர் கே. அந்தோணி முன்னிலை வகித்தனர்.தோட்டக்கலை உதவி இயக்குனர் மா. கெப்தமன் வரவேற்றார். விழாவில் வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் சாந்தி, கால்நடை மருத்துவர் டாக்டர் சுந்தர், வேளாண் பொறியியல் துறை அலுவலர் ராம் சுரேஷ், வேளாண்மை அலுவலர் சுருளி ராஜ், உதவி அலுவலர் மணிகண்ணன் ஆகியோர் விவசாயம் குறித்த பல்வேறு விளக்கம் அளித்தனர்.

புழல் ஒன்றிய அ.தி.மு.க செயலாளரும், புள்ளிலைன் ஊராட்சித் தலைவருமான ஆர்.சுப்பிரமணி, காஞ்சி மண்டல அண்ணா போக்குவரத்து தொழிற்சங்க செயலாளர் ஆர்.சங்கர் ஆகியோர் மா, கொய்யா, மல்லிகை, ரோஜா, தென்னை மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்கினர். விவசாயிகளுக்கு இலவச உணவு வழங்கப்பட்டது.

## பெரியகுளம் அருகே உழவர் பெருவிழா

பெரியகுளம் அருகே உள்ள தாமரைக்குளத்தில் உழவர் பெருவிழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தாமரைக்குளம் பேரூராட்சித் தலைவர் எம். ராமதண்டபாணி தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் ஆர். பெரியசாமி முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர் ஜவஹர் வரவேற்றார்.

பேரூராட்சி துணைத் தலைவர் சி. சந்தோசம், துணை வேளாண்மை இயக்குநர் கோவிந்தராஜ், தோட்டக்கலை உதவி இயக்குநர் குமாரவடிவேல், விதைச் சான்று அலுவலர் ராஜகுரு,

வேளாண்மைப் பொறியியல் துறை உதவிப் பொறியாளர் ராமகிருஷ்ணன், கால்நடை மருத்துவர் முத்துராமன், சேகரன் (பொதுப்பணித் துறை) உள்பட பலர் திட்டங்கள் குறித்து விளக்கினர். பின்னர், மானியத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கப்பட்டன.

மேலும், உதவி வேளாண்மை அலுவலர்கள் ஏ. ரெங்கராஜ், அப்பாஸ் மந்திரி, பி. சுரேஷ் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் உஷாராணி, அருணாதேவி, மணிகண்டன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

விழாவில், விவசாயிகள் திரளாகக் கலந்துகொண்டு பயனடைந்தனர். விழாவினை முன்னிட்டு, கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. வேளாண் தொழில்நுட்பம் குறித்த கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## வறட்சி பாதிப்பு: விருதுநகர் மாவட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ரூ.59 கோடி ஒதுக்கீடு

விருதுநகர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் ரூ.59 கோடி ஒதுக்கீடு செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் மொத்தம் 3.50 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. அதில், தற்போது, 2.75 லட்சம் ஏக்கரில் நெல் மற்றும் மக்காச்சோளம், சூரியகாந்தி மற்றும் பணப்பயிர்களான கடலை, பருத்தி, கரும்பு, தானியம், பயறு வகைகள் உள்ளிட்ட பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. எனவே பயிரிட்டதிலிருந்து போதுமான மழை மற்றும் நீர் ஆதாரம் இல்லாத நிலையில் வறட்சியால் விவசாய சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால், விவசாயிகள் போட்ட முதலைக் கூட எடுக்க முடியவில்லை.

அதேபோல், சாத்தூர், சிவகாசி, விருதுநகர், அருப்புக்கோட்டை, நரிக்குடி, காரியாபட்டி, திருச்சுழி ஆகிய பகுதிகளில் விளைநிலங்கள் வறட்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டன. மாவட்ட நிர்வாகம் மற்றும் வேளாண்மை துறை சார்பில் பாதிப்பு குறித்து கணக்கெடுக்கப்பட்டு அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் நிதியமைச்சர் தலைமையில் உயர் நிலைக் குழுவினர் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டனர். பாதிக்கப்பட்ட 1.72 லட்சம் ஏக்கர் விளைநிலங்களுக்கு நிவாரணத் தொகை வழங்குவதற்காக ரூ.59 கோடி ஒதுக்கீடு செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

இதில், 50 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட நெல்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரமும், அதேபோல் நீர்ப்பாசன ஆதாரம் உள்ள இடங்களில் 50 சதவீத்திற்கு மேல் சாகுபடி இழப்பு

ஏற்பட்டிருந்தால் அனைத்து விவசாயிகளுக்கும் ரூ.4 ஆயிரமும், அதேபோல், மானாவாரி பயிரில் 50 சதவீதத்திற்கு மேல் சாகுபடி இழப்பு இருந்தால் ரூ.3 ஆயிரம் நிவாரணத் தொகையும் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் கூறியதாவது: இத்தொகை அனைத்தும் பாதிப்படைந்த விவசாயிகளின் வங்கிக் கணக்கில் அடுத்த வாரம் முதல் நேரடியாக வரவு வைக்கப்பட இருக்கிறது. மேலும், இதுவரையில் கணக்கு தொடங்காத விவசாயிகள் உடனடியாக வேளாண்மை கூட்டுறவு வங்கி அல்லது தேசிய வங்கிகளில் கணக்கு தொடங்கி அதன் விவரங்களை உடனடியாக கிராம நிர்வாக அலுவலர்களிடம் அளிக்க வேண்டும். அவர்கள் சான்றொப்பம் இட்டு மறுபடியும் வங்கிக்கு அனுப்பி வைக்க விவசாயிகளின் கணக்கில் நிவாரணத் தொகை வரவு வைக்கப்பட இருப்பதாக மாவட்ட ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் தெரிவித்தார்.

## பாரம்பரிய வேளாண் பொருள்கள் விழிப்புணர்வு கருத்தரங்கு, கண்காட்சி

பாரம்பரிய வேளாண் பொருள்களின் முக்கியத்துவம் மற்றும் மதிப்பினை வெளிக்கொணரும் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி விருதுநகர் மாவட்ட அளவில் ஸ்ரீவில்லிபுத்தூரில் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கருத்தரங்கு மற்றும் கண்காட்சிக்கு, ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள சாம்பல் நிற அணில் சரணாலய வன உயிரின காப்பாளர் அசோக்குமார் தலைமை தாங்கினார்.

மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் எஸ்.கனகராஜ் வரவேற்றார்.

பாரம்பரியமிக்க வேளாண் பொருள்களின் முக்கியத்துவத்தினை காக்கும் பொருட்டு, தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து விருதுநகர் வேளாண்மை இணை இயக்குநர் சுப்பையா உரையாற்றினார்.

பாரம்பரிய வேளாண் பொருள்களான சிறு தானியங்களின் முக்கியத்துவம் குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் ப.அமலாபாலு சிறப்புரையாற்றினார்.

இளநீர், சீகைக்காய் மற்றும் பருத்தி பொருள்களின் பயன்கள் குறித்து அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் பால்பாண்டி உரையாற்றினார்.

சிறுதானியங்கள் சாகுபடி செய்ய வேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் நிகர லாபம் குறித்து மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் பா.வன்னியராஜன் விளக்கினார்.

பாரம்பரிய வேளாண் பொருட்களான இளநீர், பருத்தி, சீகைக்காய் மற்றும் சிறுதானியங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் மதிப்பூட்டப்பட்ட பொருள்கள் குறித்தும் அவற்றை சந்தைப்படுத்துதல் குறித்தும் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் க.முத்துமுனியாண்டி விளக்கினார்.

மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) எம்.எஸ்.செண்பகராஜ், பாரம்பரியமிக்க வேளாண் பொருள்களை காப்பதில் விவசாயிகளின் பங்கு குறித்து எடுத்துரைத்தார்.

கருத்தரங்கில் தோட்டக்கலை பயிர்கள் குறித்தும், அவற்றை காக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் மாவட்ட தோட்டக்கலை உதவி இயக்குநர் சு.சமுத்திரபாண்டியன் சிறப்புரையாற்றினார்.

பாரம்பரிய வேளாண் பொருள்களின் மதிப்பை விவசாயிகளுக்கு உணர்த்தும் வகையில் பல்வேறு துறைகள் சார்பில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண்மை அலுவலர் ல.முத்துலட்சுமி செய்திருந்தார். வேளாண்மை உதவி இயக்குநர் கி.ஆறுமுகம் நன்றி கூறினார்.

### சின்னவெங்காயம் விலை உயர்வு

பொங்கலூர் பகுதியில் அறுவடை செய்யப்படும் சின்னவெங்காயத்துக்கு நல்ல விலை கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பொங்கலூர் பகுதியில் ஆண்டுக்கு 75 ஆயிரம் மெட்ரிக் டன் சின்னவெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. சின்னவெங்காயத்தை அதிகபட்சமாக 3 மாதங்களுக்கு மட்டுமே இருப்பு வைத்து விற்பனை செய்ய முடியும். அதனால் விவசாயிகள் அன்றைய சந்தை விலைக்கு சின்னவெங்காயத்தை விற்பனை செய்து விடுகின்றனர். கடும் வறட்சியால் தண்ணீர் பிரச்னை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, சின்னவெங்காயம் சாகுபடி செய்யும் பரப்பு வழக்கத்தைவிட குறைந்துள்ளது. இதனால் சந்தைக்கு வரத்து குறைந்து சின்னவெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது. நல்ல தரமுள்ள சின்னவெங்காயத்தை ஒரு கிலோ ரூ.40-க்கு விவசாயிகளிடம் வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.சில்லறை விற்பனையில் கிலோ ரூ.50-க்கு விற்பனையாகிறது.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 33.10 அடி

பவானிசகார் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 33.10 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 89 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 800 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.50 டி.எம்.சி.

## வேளாண் உற்பத்தி பொருள்களை சேமித்து லாபம் ஈட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் வலியுறுத்தல்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண் பொருள்களை சேமித்து நல்ல வருவாய் ஈட்ட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் வலியுறுத்தினார்.

கிருஷ்ணகிரியில் வெள்ளிக்கிழமை சிறு விவசாயிகள் வேளாண் வணிக கூட்டமைப்பு சார்பில் முன்னோடி விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேளாண்மை துணை இயக்குநர் பூபதி வரவேற்றார். வேளாண் நிதி நிறுவனம் திட்ட அலுவலர் நிதிஷ்சர்மா, விவசாயிகள் வேளாண் வணிக கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் கண்ணன் ஆகியோர் திட்ட விளக்கவுரையாற்றினார்.

கூட்டத்திற்கு தலைமை வகித்து மாவட்ட டி.பி.ராஜேஷ் பேசியது: சிறு விவசாயிகள் வேளாண் வணிக கூட்டமைப்பு என்பது இந்திய அரசின் வேளாண்மை மற்றும் கூட்டுறவு துறையின் கீழ் செயல்படும் ஒரு நிறுவனமாகும். இந்த நிறுவனம் புதிய வேளாண் தொழில் திட்டங்களை தொடங்க முதலீடு செய்து அதன் மூலம் கிராமபுற வேலைவாய்ப்பு மற்றும் வருவாயை பெருக்கிட வழிவகை செய்கிறது. மேலும், நிதியினை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக கடனாகவும் தொழில் முதலீடாகவும் பயனாளிகளுக்கு வழங்கி, வேளாண் வணிக திட்டங்களை வலுப்படுத்துகிறது. விவசாயிகள் உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் வேளாண் பட்டதாரிகள் ஆகியோரை திட்ட செயலாக்கத்தில் ஈடுபட செய்வதோடு, குளிர்பதன கிடங்குகள் அமைத்தல், மாம்பழச்சாறு எடுத்து அதனை பதப்படுத்துதல், மலர்களிலிந்து வாசனை திரவியங்கள் தயாரித்தல், காட்டு மரங்களிலிருந்து கோந்து மற்றும் பிசின் தயாரித்தல், வண்ண மீன்கள் வளர்த்தல், தேனி வளர்த்தல் மற்றும் தேன் சேகரித்தல் ஆகிய தொழில்கள் குறித்து தொழில் முனைவோருக்கு தேவையான பயிற்சிகளையும் அளிக்கிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படுவதால் விவசாயிகள் மாம்பழச்சாறு எடுத்து அதனை பதப்படுத்தும் தொழில்கள் தொடங்கி, குளிர்பதன கிடங்குகள் அமைத்து அதில் பொருள்களை சேமித்து வைத்து நல்ல விலைக்கு விற்று விவசாயிகள் லாபம்

அடைய வேண்டும் என தொழில் முனைவோர் மற்றும் முன்னோடி விவசாயிகளை கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு சரியான விலைகிடைக்கவும், இவற்றை விவசாயிகள் தெரிந்துக் கொண்டு குழுக்களாக சேர்ந்து நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

விழாவில், வனத் துறை சார்பில் தமிழ்நாடு உயிர் பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டம்-தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பு குறித்த கையேட்டை ஆட்சியர் வெளியிட்டார். இந்த விழிப்புணர்வு கூட்டத்தில் தோட்டக்கலை துறை இணை இயக்குநர் பெரியசாமி, உதவி பொது மேலாளர் சிதம்பரம், வனவியல் விரிவாக்க அலுவலர் பழனிச்சாமி, நேர்முக உதவியாளர் (வேளாண்மைத் துறை) சுப்பையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மே 8-ல் கறவை மாடுபராமரிப்பு பயிற்சி

கரூரில் உள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் கறவை மாடுகளை கோடைகாலத்தில் பராமரிப்பது குறித்த இலவச பயிற்சி மே 8-ம் அளிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து இந்த மையத்தின் தலைவர் ந. அகிலா வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கோடைகாலங்களில் கறவை மாடுகளில் ஏற்படும் உற்பத்தி இழப்பு அதற்கேற்ற பண்ணை வீட்டமைப்பு, தீவன சாகுபடி, கலப்பு தீவன மேலாண்மை, நோய்கள் மற்றும் அவற்றை தடுக்கும் முறைகள், விற்பனை உத்திகள், பண்ணை பொருளாதாரம் ஆகியவை குறித்த தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர், மே 8-ம் தேதி காலை 10 மணிக்கு பயிற்சி மையத்துக்கு நேரில் வந்து கலந்துகொள்ளலாம். பயிற்சியில் கலந்து கொள்ள 8903932591, 9486111251 என்ற எண்ணை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 23.01 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 23.01 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 22 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## நாகையில் நன்னீர் மீன்வளர்ப்பு பயிற்சி முகாம்

நாகை மீன்வளத் தொழில்நுட்ப நிலையத்தில் நன்னீர் மீன் வளர்ப்பு பயிற்சி முகாம் மே 13-ம் தேதி தொடங்கி நடைபெறுகிறது.

இதுகுறித்து நாகை மீன்வளத் தொழில் நுட்ப நிலையத்திலிருந்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு :

நாகை முதலாம் கடற்கரை சாலையில் உள்ள மீன்வளத் தொழில்நுட்ப நிலையத்தில் நன்னீர் மீன் வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் மே 13-ம் தேதி தொடங்கி மே 17-ம் தேதி வரை நடைபெறுகிறது.

நன்னீர் மீன்வளர்ப்பின் தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டு, மீன் பண்ணைகளில் தொழில்நுட்ப செயல்பாடுகள் குறித்து நேரடியாக அறிந்து கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்த அனைவரும் இந்தப் பயிற்சியில் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்போருக்குச் சான்றிதழ் மற்றும் தொழில்நுட்பக் கையேடு வழங்கப்படும்.

பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், நாகை மீன்வளத் தொழில்நுட்ப நிலையத்தில் உரிய கட்டணம் செலுத்தி தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இது குறித்த மேலும் விவரங்களுக்கு 04365 240442 என்ற தொலைபேசி எண்ணில் மீன்வளத் தொழில் நுட்ப நிலைய அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**4.05.2013 A.M**

---

## விவசாயிகள் கவலை தண்ணீரின்றி காய்ந்து சருகான தென்னை மரம்

திருச்செங்கோடு: போதிய தண்ணீர் இல்லாததால், சிந்தாளந்தூர் பகுதியில் உள்ள தென்னை மரங்கள் காய்ந்து கருகி, விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளது.திருச்செங்கோடு அடுத்த சித்தாளந்தூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில், மானாவாரி விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பருவமழை பொய்த்ததால், ஏரி, குளம், குட்டை மற்றும் கிணறுகளில், நீரின்றி வறண்டு காணப்படுகிறது. மேலும், நிலத்தடி நீரும் வற்றியதால், போதிய நீராதாரமின்றி, மரங்களும் காய்ந்து கருகி, விவசாயிகளுக்கு பலத்த நஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளது.விவசாயிகள், தங்களது ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளுக்கும், தங்களது தேவைக்கும், பல கி.மீ., தூரம் சென்று தண்ணீர் எடுத்து வரும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அதேபோல், போதிய நீரின்றி, தென்னை மரங்கள் காய்ந்து கருகி உள்ளது. அதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## திண்டுக்கல் மாவட்டத்திற்கு வறட்சிநிதியாக விவசாயிகளுக்கு ஒதுக்கீடு ரூ.60 கோடி நெற்பயிர்கள் பாதிப்பிற்கு ஏக்கருக்கு ரூ.5000 வழங்க முடிவு

திண்டுக்கல்:திண்டுக்கல் மாவட்டத்தில் 50 சதவீதத்திற்கு மேல் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க மாநில அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக முதற்கட்டமாக ரூ.60 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை அடுத்தடுத்து பொய்த்ததால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது.இதையடுத்து மாவட்ட வாரியாக, அமைச்சர்களை கொண்ட குழு வறட்சிபாதித்த பகுதிகளை பார்வையிட்டது. இதற்கிடையில் வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மூலம் வறட்சி பாதித்த பகுதிகள் வருவாய் கிராமம் வாரியாக கணக்கெடுக்கப்பட்டது.இதில் 50 சதவீத பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க முடிவு செய்து நிவாரண தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.முதற்கட்டமாக மாவட்டத்திற்கு விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணநிதி வழங்க ரூ. 60 கோடியை ஒதுக்கியுள்ளது.நெற்பயிர் பயிரிட்டு அறுவடை செய்ய முடியாமல்

பாதிக்கப்பட்ட விசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 5 ஆயிரம் வீதம் நிதி வழக்கப்படவுள்ளது. நெற்பயிர் பயிரிட்ட விவசாயிகளுக்கு மொத்தம் ரூ. 4 கோடியே 95 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதர பயிர்கள் பயிரிட்டு 50 சதவீதம் பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு ரூ.44 கோடியே 69 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.இந்நிதியில் இறவை பாசன விவசாயிகளுக்கு ரூ.4000 மற்றும் இதரவிவசாயிகளுக்கு ரூ.3000 வழங்கப்படவுள்ளது.தென்னை மரங்கள் காய்ந்து பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணமாக மொத்தம் ரூ.10 கோடியே 34 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.கலெக்டர் வெங்கடாசலம் கூறியதாவது:தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நிவாரண தொகை, விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. வங்கியில் கணக்கு துவக்கியிருந்தால் நிவாரண தொகை அவரவர் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படவுள்ளது. வங்கி கணக்கு இல்லாத விவசாயிகளுக்கு தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் வழங்கப்படவுள்ளது," என்றார்.

## வறட்சி நிவாராணத்தில் பாரபட்சம் மா,கொய்யா விவசாயிகள் அதிர்ச்சி

பழநி:வறட்சி நிவாரணத்தொகை கணக்கெடுப்பு பட்டியலில், மா, கொய் யா, எலுமிச்சை போன்ற பழங்கள் சேர்க்கப்படாததால், பழநி விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.தமிழக அரசின் வறட்சி நிவாரணத்தொகையாக திண்டுக்கல் மாவட்டத்திற்கு 60 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வருவாய்துறை மூலம், வறட்சியால் பாதித்த பகுதிகள் கணக்கு எடுக்கப்பட்டது. இதில் மரவகைகளில் தென்னையை மட்டும் கணக்கெடுத்துள்ளனர். மா, கொய்யா, எலுமிச்சை, புளி ஆகிய மரங்களை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. மா,கொய்யா போன்ற மரங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை விவசாயிகள் செலவு செய்துள்ளனர்.

இவ்வாண்டு கடும் வறட்சிக்காரணமாக, கால் பங்கு கூட வருமானம் கிடைக்கவில்லை. ஏராளமானவர்கள் தங்கள் முதலீட்டை இழந்துள்ளனர். ஆகையால், வறட்சி நிவாராணத்தொகை கணக்கெடுப்பில், மா, கொய்யா, எலுமிச்சை, புளி ஆகிய மரங்களையும் சேர்த்து, நிவாரணத்தொகை வழங்க வேண்டும். அதற்கு தமிழக அரசு உத்தரவிட வேண்டும். என பழ விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.முன்னாள் எம்.எல்.ஏ., பழனிவேல் கூறுகையில், "திண்டுக்கல் பழங்கள் வகையில் ரூபாய் கோடிகணக்கில் வருமானம் தரக்கூடிய மாவட்டம் ஆகும். ஏராளமான விவசாயிகள் மா, கொய்யா பழங்கள் காய்ப்பு இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு வறட்சி நிவாரணத்தொகை வழங்க வேண்டும்,"" என்றார்.ஆர்.டி.ஓ.,ரவிச்சந்திரன் கூறுகையில், நெல்,கம்பு, மக்காசோளம், தென்னை ஆகியவற்றின் பாதிப்புகுறித்து, வேளாண்மை துறையினருடன் இணை ந்து வருவாய்த்துறை கணக்கெடுத்துள்ளனர். மா, கொய்யாபழங்கள் பட்டியலில் இல்லை. விவசாயிகளின் கோரிக் கை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்," என்றார்.

## மாவட்டத்தின் மழை அளவு

திண்டுக்கல்:மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு விபரம் வருமாறு: திண்டுக்கல்-32.40 மி.மீ., கொடைக்கானல்-10.60, வேடசந்தூர்-4.90, வேடசந்தூர் புகையிலை ஆராய்ச்சி மையம் - 6.80 மி.மீ., மழை பெய்தது. மாவட்டத்தில் பெய்த மழையின் சராசரி அளவு 5.47 மி.மீ.,. நத்தம், நிலக்கோட்டை, பழநி, சத்திரப்பட்டி, ஒட்டன்சத்திரம், கொடைக்கானல் போட்கிளப், காமாட்சிபுரம் பகுதிகளில் மழை பெய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில்ஒரு கிலோ தக்காளி ரூ.24

ஒட்டன்சத்திரம்:வரத்து குறைவு காரணமாக, ஒட்டன்சத்திரத்தில் தக்காளி கிலோ ரூ.24க்கு விற்றது.ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள கிராமப்பகுதிகளில் தக்காளி அதிகமாக பயரிடப்படுகிறது. தொடர் மழையின்மை காரணமாக நீர்நிலைகள் வற்றியதால் தக்காளி பயிரிடப்படும் பரப்பு வெகுவாக குறைந்து விட்டது.

போலியம்மனூர், கன்னிவாடியில் விளைந்த தக்காளி, பறிக்கப்பட்டு ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. மற்ற பகுதிகளில் தக்காளி செடிகள் காய்ந்து விட்டதால் வரத்து இல்லை. ஒரு கடைக்கு 200 பெட்டி தக்காளி வந்து கொண்டிருந்த நிலையில் தற்போது 100 பெட்டிக்கும் கீழ் தான் வருகிறது.

இதனால் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் தக்காளி விலை இருமடங்காக உயர்ந்தது. கடந்த மாதம் வரை 13 கிலோ கொண்ட ஒரு தக்காளி பெட்டியின் விலை 160 ரூபாயாக (கிலோ ரூ.12.30) இருந்தது. தற்போது அதே அளவு கொண்ட தக்காளி பெட்டி ரூ.310க்கு(கிலோ ரூ.24) விற்கிறது.வியாபாரி ஒருவர் கூறுகையில், ""தக்காளி வரத்து குறைந்து கொண்டே இருப்பதால், இன்னும் விலை உயர வாய்ப்புள்ளது," என்றார்.வெளிமார்க்கெட்டில் ஒரு கிலோ தக்காளி ரூபாய் 35க்கு விற்கப்படுகிறது.

## நிலக்கடலை மகசூல் 5,000 மெட்ரிக் டன் ராமநாதபுரம் விவசாயிகள் சாதனை

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் பருவமழை தவறியபோதும், நடப்பாண்டு நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், 5,000 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக மகசூல் செய்து சாதனை படைத்தனர். மாவட்டத்தில் 15 ஆயிரம் எக்டேரில், நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. முதுகுளத்தூர், கமுதி, தெற்குவாணிவீதி, கற்பூரவலசை, இதம்பாடல், பனையடியேந்தல் போன்ற பகுதிகளில் கடலை விவசாயிகள் மானாவாரி பயிராக பயிரிடப்பட்டுள்ளனர். எக்டேருக்கு 1,100 கிலோவும், நன்றாக விளைச்சல் இருக்கும் பட்சத்தில் 1,750 கிலோ கூடுதலாக மகசூல் கிடைக்கும். தற்போது, கூடுதல் விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் ஆர்வமுடன் இதை பயிரிட்டுள்ளனர்.

தெற்குவாணி வீதி விவசாயி, மணிகண்டன் கூறியதாவது: 2 ஏக்கரில் கடலை சாகுபடி செய்துள்ளேன். தண்ணீர் இல்லாததால் மகசூல் பாதிக்கப்படும் சூழ்நிலை உள்ளது. தவிர, இலைகள் சுருண்டு காணப்படுவதால் பூச்சி தாக்குதல் பயம் அதிகரித்துள்ளது, என்றார்.வேளாண் அறிவியல் நிலையம், பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் விஜயராகவன் கூறியதாவது:தமிழ்நாடு வேளாண் பல்கலை மூலம் "டி.என்.ஏ.யு., நிலக்கடலை ரிச்' என்ற பயிருக்கு தேவையான அனைத்து நுண்ணூட்ட சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த கலவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதை தெளிப்பான் மூலமாகவும், மணலுடன் கலந்து அடியுரமாகவும் பயன்படுத்தலாம்.
குறிப்பாக, பூக்கும் பருவம், விழுது விடும் பருவங்களில் தெளித்தால் மகசூல் 15 சதவீதம் வரை அதிகரிக்கும். பூச்சி, புழு தாக்குதலை சமாளிக்க வேளாண் அதிகாரிகளை அணுகலாம். மாவட்டத்தில் 5,400 மெட்ரிக் டன் நிலக்கடலை உற்பத்தி செய்யப்படுகிறது, என்றார்.

## ஏமாற்றிய கோடை மழைகருகும் மிளகாய் செடிகள்

ஆர்.எஸ்.மங்கலம்:கோடை மழை போதிய அளவு பெய்யாததால், ஆர்.எஸ்.மங்கலத்தில் மிளகாய் செடிகள் கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.மாவட்டத்தின் நெல் களஞ்சியமாக விளங்கும் திருவாடானை தாலுகாவில், நெல்லுக்கு அடுத்தபடியாக மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது. ஆர்.எஸ்.மங்கலம், செங்குடி, உப்பூர், பாரனூர், சேத்திடல், சீனாங்குடி, புல்லமடை, ஆனந்தூர், வண்டல், வரவணி உள்ளிட்ட சுற்றுப்புற கிராமங்களில் கடந்த நவம்பர் கடைசி வாரத்தில் 2,400 ஏக்கரில் மிளகாய் பயிரிடப்பட்டது. வறட்சியில் விளையும் தோட்டக்கலை பயிர் என்றாலும், ஆறு மாதங்களுக்கு மேலாக மழை இல்லை. கோடை மழையும் ஏமாற்றியதால், ஜூன் வரை மகசூல் தரவேண்டிய மிளகாய்செடிகள் தற்போதே கருகிவிட்டன.

ஆர்.எஸ்.மங்கலம் விவசாயிகள் சுப்பையா, கந்தசாமி கூறுகையில், ""ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்துள்ளோம். தொடர்ந்து மழை இல்லாததால், ஆழ்துளை கிணறு மூலம் ஏக்கருக்கு 10 ஆயிரம் வரை தண்ணீர் பாய்ச்ச செலவு செய்துள்ளோம். மகசூலை கணக்கு செய்துபார்க்கையில் மிளகாயில் நஷ்டமே ஏற்பட்டுள்ளது. அரசு, மிளகாய் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்றனர்.

## விவசாயிகள் கையேடு இலவசம்

அருப்புக்கோட்டை:அருப்புக்கோட்டை அருகே வேலாயுதபுரத்தில், உழவர் விழா நடந்தது. ஒன்றிய துணைத் தலைவர் கொப்பையராஜ் தலைமை வகித்தார். வேளாண்., உதவி இயக்குனர் மோகன்தாஸ் சவுமியன் முன்னிலை வகித்தார். தோட்ட கலை உதவி இயக்குனர் பூவலிங்கம் , பிரசார ற உதவி இயக்குனர் அருணாச்சலம் அக்மார்க் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் பற்றி பேசினார். நவீன இயந்திரங்கள், மானியத்தில் இயந்திரங்கள் வழங்குவது குறித்து விளக்கப்பட்டது.

## நீலகிரியில் பால் உற்பத்தியை பெருக்க...புதிய முயற்சி : கறவை மாடுகளுக்கு கலப்பு தீவனம்

ஊட்டி:பால் உற்பத்தியை பெருக்க,"ஆவின்' நிறுவனம் முயற்சிமேற்கொண்டுள்ளது. இதற்காக கறவை மாடுகளுக்காகதயாரிக்கப்படும் தரமான கலப்புதீவனங்கள் வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. ஊட்டியில், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு நிறுவனம் (ஆவின்) செயல்படுகிறது. மாவட்ட அளவில், 98 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள், "ஆவின்' நிறுவனத்திற்கு, பால் வழங்கி வருகின்றனர். மாவட்டத்தில் குறைந்துவிட்ட மேய்ச்சல் நிலம், தீவனப் பற்றாக்குறை, மாடு வளர்ப்பில் ஈடுபட்டு வந்தோரின் வாரிசுகள் கல்வி பெற்று, வெளியூர்களுக்கு வேலை தேடி செல்லும் நிலை என, பல காரணங்களால், கறவை மாடு வைத்திருப்போரின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.கடந்த காலங்களில், டான் டீ, "உபாசி' மற்றும் தனியார் தேயிலை தோட்ட தொழிலாளர்கள், கறவை மாடு வளர்த்து, "ஆவின்' நிறுவனத்திற்கு பால் வழங்க அனுமதிக்கப்பட்டனர். நாளடைவில், எஸ்டேட் நிர்வாகங்கள், இதற்கு தடை விதித்தன. சமீபத்தில், மாவட்ட கலெக்டர் தலைமையில், எஸ்டேட் நிர்வாகிகள் மட்டத்திலான ஆலோசனைக் கூட்டத்தில், "தோட்ட தொழிலாளர்களை மாடு வளர்க்க அனுமதிக்க வேண்டும்' என்ற மாவட்ட கலெக்டர் அறிவுறுத்தினார். "தோட்ட தொழிலாளர்கள், தோட்ட வேலையில் கவனத்தை குறைத்து, மாடு வளர்ப்பில் ஆர்வம் காட்டி விடுவர்; எனவே, மாடு வளர்க்க அனுமதிக்க முடியாது' என, எஸ்டேட் நிர்வாகங்கள் தெரிவித்துவிட்டன.

புதிய முயற்சிநீலகிரி "ஆவின்' நிறுவன பொது மேலாளர் பார்த்தசாரதி கூறியதாவது:"ஆவின்' நிறுவனம் மூலம், தினமும் 13 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. மார்ச் - மே இடைப்பட்ட, கோடை சீசன் காலத்தில், தேவை அதிகரித்து, தினமும் 18 ஆயிரம் லிட்டர் பால் தேவைப்படுகிறது. பற்றாக்குறையை ஈடு செய்ய, கோவை "ஆவின்' நிறுவனத்தில் இருந்து பால் வாங்கி வருகிறோம்.கறவை மாடுகள் மற்றும் மேய்ச்சல் நிலங்களை அதிகப்படுத்த வாய்ப்பு குறைவு என்ற சூழ்நிலையில், இருக்கின்ற மாடுகளின் பால் கறவை அளவை அதிகரிக்க, ஈரோட்டில் தயாராகும் கறவை மாடுகளுக்கான தரமான கலப்பு தீவனத்தை, நீலகிரி பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கி வருகிறோம்; தீவனத்தை தங்கள் பகுதிகளுக்கு கொண்டு செல்வதற்கான, போக்கு
வரத்து செலவையும் "ஆவின்' நிறுவனமே ஏற்கிறது.மாவட்ட அளவில், கூடலூரில் அதிக பால் உற்பத்தியாளர்கள் இருப்பதால், அங்கு குளிரூட்டு நிலையங்கள் அமைக்க உள்ளோம். இவ்வாறு, பார்த்தசாரதி கூறினார்.

## ஊட்டியில் கன மழை: விவசாய நிலங்களில் வெள்ளம்

ஊட்டி:ஊட்டியை சுற்றியுள்ள கிராமங்களில், நேற்று, கன மழை பெய்தது; விவசாய நிலங்கள் நீரில் மூழ்கின.நீலகிரி மாவட்டத்தில், கோடை சீசன் துவங்கியுள்ள நிலையில், எதிர்பார்த்த மழை பெய்யவில்லை. இந்நிலையில், நேற்று மதியம் துவங்கி, ஊட்டியை சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த மழை பெய்தது. ஊட்டி அருகே தேனாடுகம்பை பகுதியில், பெய்த கன மழையில், அங்குள்ள விவசாய நிலங்களில் வெள்ளம் தேங்கி நின்றது. "சரிவான பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த, பூண்டு, அவரை உட்பட பயிர்கள், வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு விட்டது' என, அப்பகுதியில் உள்ள விவசாயிகள் கூறினர். மழையால், ஊட்டியில் குளிர் அதிகரித்து காணப்பட்டது

## நிலக்கடலை சாகுபடி குறித்து இலவச பயிற்சி

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 7ம் தேதி நிலக்கடலை மற்றும் ஆமணக்கு சாகுபடியில் நவீன தொழில்நுட்பம் குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது என, அதன் ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.வேளாண் அறிவியல் நிலையத்தில் நடக்கும் இலவச பயிற்சி முகாமில், நிலக்கடலை, ஆமணக்கு சாகுபடி முக்கியத்தும், மண் பரிசோதனை, வீரிய ஒட்டு ரகம், விதை நேர்த்தி போன்ற பல்வேறு தலைப்புகளில், பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில், விவசாயிகள் உட்பட அனைவரும் பங்கேற்கலாம்.பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், வரும், 6ம் தேதிக்குள், வேளாண் அறிவியல் நிலையத்திற்கு, நேரில்

அல்லது, 04286-266345, 266244, 266650 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு பெயர் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாரம்பரிய வேளாண் பொருட்கள் பயன்பாடு விழிப்புணர்வு பேரணி

நாமக்கல்: கபிலர்மலை, நாமக்கல் வட்டாரத்தில் நடந்த பாரம்பரிய வேளாண் பொருள்களின் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு பேரணியில், ஏரளாமானோர் பங்கேற்றனர்.ப.வேலூர் அடுத்த கபிலர்மலை வட்டாரத்தில் நடந்த விழிப்புணர்வு பேரணியை, கபிலக்குறிச்சி பஞ்சாயத்து தலைவர் கலாராணி தலைமை வகித்து, துவக்கி வைத்தார். வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜு வரவேற்றார். யூனியன் சேர்மன் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.பாரம்பரிய வேளாண் பொருட்களான, இளநீர், சீகைக்காய், பருத்தி ஆகியவற்றின் பயன்பாடு பற்றி, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் துவங்கிய பேரணி, முக்கிய வீதிகள் வழியாக சென்று, ராஜகணபதி மண்டபம் முன் முடிவடைந்தது.அதை தொடர்ந்து, கருத்தரங்கு நடந்தது. வேளாண் அலுவலர்கள், விவசாயிகள், மகளிர் சுயஉதவிக்குழுவினர், கல்லூரி மாணவ, மாணவியர் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர். நாமக்கல் வட்டார வேளாண் துறை சார்பில், பாரம்பரியமிக்க வேளாண் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு பேரணி, நம்மாழ்வார் நடுநிலைப்பள்ளியில் துவங்கியது. வேளாண் துறை துணை இயக்குனர் லோகநாத பிரகாஷம் துவக்கி வைத்தார். வேளாண் அலுவலர் செல்வி வரவேற்றார்.பள்ளியில் இருந்து துவங்கிய பேரணி, கடைவீதி, சேந்தமங்கலம் சாலை, பலப்பட்டரை மாரியம்மன் கோவில், நேதாஜி சிலை வழியாக சென்று, மீண்டும் பள்ளியில் முடிவடைந்தது. வேளாண் பொருட்களின் மகத்துவத்துவம் குறித்து, மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, இப்பேரணி நடத்தப்பட்டது.வட்டார வேளாண் உதவி இயக்குனர் ஜோ தேடியாஸ் துவக்க உரையாற்றினார். பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், வேளாண் அலுவலர்கள், விவசாயிகள், பள்ளி மாணவ, மாணவியர் உள்பட பலர் பங்கேற்றனர்.

## யூரியா உர விற்பனை அதிகரிப்பு

புதுடில்லி:நாட்டின் யூரியா உர விற்பனை, சென்ற 2012-13ம் நிதியாண்டில், 3.02 கோடி டன்னாக சற்று அதிகரித்துள்ளது. கடந்த 2011-12ம் நிதியாண்டில், இதன் விற்பனை, 2.95 கோடி டன்னாக இருந்தது. ஆக, சென்ற நிதியாண்டில், யூரியா விற்பனை, 2 சதவீதம் சரிவடைந்துள்ளது என, மத்திய ரசாயன மற்றும் உரத்துறை இணை அமைச்சர் ஸ்ரீகாந்த் ஜெனா பார்லிமென்டில் தெரிவித்தார்.மதிப்பீட்டு நிதியாண்டுகளில், பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் (பி அண்டு கே) உரங்கள் விற்பனை, 25 சதவீதம் வீழ்ச்சி கண்டு, 2.56 கோடி டன்னிலிருந்து, 1.91 கோடி டன்னாக சரிவடைந்துள்ளது.

பயிர் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத ஊட்டச் சத்தாக விளங்கும், யூரியா பயன்பாடு, சென்ற 2010-11ம் நிதியாண்டில், 2.82 கோடி டன் என்ற அளவில் இருந்தது.மேலும், பி அண்டு கே, டீ.ஏ.பி (டை- அமோனியம் பாஸ்பேட்) உரங்களின் பயன்பாடு, சென்ற 2010-11ம் நிதியாண்டில், 1.13 கோடி டன்னாகவும், 2011-12ம் நிதியாண்டில், 1.12 கோடி டன்னாகவும், 2012-13ம் நிதியாண்டில், 92.20 லட்சம் டன்னாக இருந்தது.

இதே நிதியாண்டுகளில், மியூரேட் ஆப் பொட்டாஷ் (எம்.ஓ.பி.,) பயன்பாடு, முறையே, 38.90 லட்சம் டன், 30 லட்சம் டன் மற்றும் 21.30 லட்சம் டன்னாக இருந்தது. இதே போன்று, கலப்பு உரங்கள் பயன்பாடு முறையே, 1.03 கோடி டன், 1.14 கோடி டன் மற்றும் 72.90 லட்சம் டன் என்ற அளவில் இருந்தது.நடப்பு 213-14ம் நிதியாண்டில், ஏப்ரல் மாதத்தில் மட்டும், நாட்டின் யூரியா பயன்பாடு, 6.16 லட்சம் டன்னாக உள்ளது. மேலும், டீ.ஏ.பி., பயன்பாடு, 22 ஆயிரம் டன்னாகவும், எம்.ஓ.பி., பயன்பாடு, 10 ஆயிரம் டன்னாகவும் உள்ளது.சென்ற 2012-13ம் நிதியாண்டில், நாட்டின் யூரியா உற்பத்தி, 2.26 கோடி டன் என்ற அளவில் இருந்தது என, அமைச்சர் மேலும் கூறினார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

4.05.2013 A.M

## விளைச்சல் குறைந்ததால் வெற்றிலை விலை உயர்வு



கிருஷ்ணராயபுரம் : கரூர் மாவட்டத்தில் வாழைக்கு அடுத்தபடியாக வெற்றிலை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு மேட்டூரில் தண்ணீர் திறக்காதது, பருவ மழை பொய்த்தது போன்ற காரணங்களால் சுமார் 800 ஏக்கரில்தான் சாகுபடி செய்யப்பட்டது. ஆனாலும் வெற்றிலை கொடிக்காலுக்கு தண்ணீர் போதிய அளவு கிடைக்கவில்லை. இதனால் கொடிக்கால்கள் காய்ந்து வருகிறது. வெற்றிலை உற்பத்தி வெகுவாக குறைந்துவிட்டது.

உற்பத்தி குறைந்ததால், தற்போது மார்க்கெட்டிற்கு வெற்றிலை வரத்து கணிசமாக குறைந்துள்ளது. இதன் காரணமாக கூடுதல் விலை கிடைத்து வருகிறது. கடந்த ஆண்டு 100 கவுளி கொண்ட மூட்டை ரூ.1,200க்கு விற்றது. தற்போது ரூ.3,000 வரை விற்கப்படுகிறது. அதேபோல் ஒரு கவுளி (100 வெற்றிலை கொண்டது) ரூ.25 முதல் ரூ.50 வரை விற்கப்படுகிறது என்றார்.

## தொடரும் அமளியால் தேசிய உணவு பாதுகாப்பு மசோதா நிறைவேறவில்லை



புதுடெல்லி: நாட்டில் ஏழ்மை நிலையில் உள்ள 67 சதவீத மக்களுக்கு சிறந்த தரத்துடன் குறைந்த விலையில் தேவையான உணவு கிடைக்க வகை செய்யும் வகையில் தேசிய உணவு பாதுகாப்பு மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ரூ.1.23 லட்சம் கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மத்திய உணவு அமைச்சர் கே.வி.தாமஸ் இந்த மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்தார். ஆனால், சரப்ஜித் சிங் மரணம், சீன ஆக்கிரமிப்பு, நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு உள்ளிட்ட இதர உள்ளூர் பிரச்னைகள் குறித்து விவாதம் நடத்த உறுப்பினர்கள் தொடர்ந்து வலியுறுத்துவதால் அவையில் கூச்சலும், குழப்பமும் நிலவுகிறது. இதனால் மசோதாவை நிறைவேற்ற முடியவில்லை.

இன்றைய வேளாண் செய்திகள்

4.05.2013 A.M

## ராஜபாளையம் பகுதியில் போதிய தண்ணீர் இல்லாததால் கருகும் பயிர்கள் நிவாரணத்தை எதிர்பார்க்கும் விவசாயிகள்

ராஜபாளையம்,

போதிய தண்ணீர் இல்லா மல் பயிர்கள் கருகி வரு கிறது. இதை தொடர்ந்து நிவாரணம் வழங்க அரசு க்கு விவசாயிகள் கோரிக் கை வைத்துள்ளனர் .

கடும் வறட்சி

ராஜபாளையம் தாலுகா முழுவதும் போதுமானமழை பெய்யாததால் கடும்வறட்சி நிலவுகிறது. நிலத்தடி நீர் மட்டம் மிகவும் குறைந்துவரு கிறது.
விவசாயத்திற்குப்போது மான நீர் கிடைக்காத நிலை யில் இங்குநிலவும் கடும் மின் தட்டுப்பாடுவிவ சாயிகளை மிகவும் அச்சுறுத்து கிறது. இப்பகுதி யில் விவசாயி கள் பயிர் செய்த நெல், கரும்பு, தென்னை, மக்காச்சோளம், காய்கறி, வாழைபோன்றபயிர் கள் வாடி கருகியநிலையில் உள்ளது.

மேலும் விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைக் காத நிலைமை உள்ளது. இந்த பிரச்சினைகளைகடந்து விளைவிக்கும் விளைபொருள் களுக்கு போதியவிலைகூட கிடைப்பதில்லைஇதனால் விவசாயிகளின் வாழ்வா தாரம் கேள்விக்குறி யாக உள்ளது. விருதுநகர் மாவட் டத்திற்கும் மற்ற டெல்டா மாவட்டத்திற்கு அறிவித்தது போல வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் எனஇப் பகுதி விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை வைத் துள்ளனர்.

பயிர்கள் கருகுகிறது

இதுகுறித்து விவசாயி பொன்னுச்சாமி கூறியதா வது:- சேத்துடீர் ஆதிபுத்திர கொண்ட அய்யனார்கோவில் சாலைபகுதியில்4ஏக்கரில் நெற்பயிர்கள் பயிரிட்டுள் ளேன். கடந்தஒரு

வருடமாக இப்பகுதியில்பருவமழைசரி வர பெய்யாததாலும்,கிணத் தடி நீர்மட்டம் குறைந்துவிட் டதாலும் விவசாயத்திற்கு போதிய நீர் இன்றி நெற்பயிர் கள் கருகி வருகின்றன.

கோரிக்கை

இது குறித்து அதிகாரி களுக்கு தகவல் கொடுக்கப் பட்டு நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்ய கோரி இருக்கி றோம். ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கைஎடுக்க வில்லை. எனவே தமிழக முதல்வர் எங்கள் குறைகளை கருத்தில்கொண்டு கருகிய பயிர்களுக்குஉரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக் கும்படி கேட்டுக்கொள் கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வறட்சி நிவாரண தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் இன்று வரவு வைக்கப்படும் கலெக்டர் தகவல்

புதுக்கோட்டை,

புதுக்கோட்டை மாவட் டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக் கான நிவாரண தொகை, விவசாயிகளின் வங்கி கணக்கில் இன்று வரவு வைக்கப் படும் என்று கலெக்டர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

நிவாரண தொகை

புதுக்கோட்டை மாவட்டத் தில் டெல்டா அல்லாத பகுதிகளில் 50 சதவீதத்திற்கு மேல் விளைச்சல் பாதிப்பு ஏற்பட்ட பயிர்களுக்கு (வறட்சி) நிவாரண தொகையாக ரூ.60 கோடியே 39 லட்சத்து 76 ஆயிரத்து 39-ஐ, தமிழக முதல்- அமைச்சர் அறிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத் தில் பாதிக்கப்பட்ட விவசாயி களின் எண்ணிக்கை 1 லட் சத்து 57 ஆயிரத்து 446 ஆகும். பாதிக்கப்பட்ட பரப்பு 1 லட்சத்து 21 ஆயிரத்து 612.106 ஏக்கர் ஆகும்.

ரூ.6Ð கோடிக்கான காசோலை...

இதையட்டி பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு வழங்கப் பட வேண்டிய நிவாரண தொகை ரூ.60 கோடியே 39 லட்சத்து 76 ஆயிரத்து 39-ஐ கருவூலக் காசோலை மற்றும் பயனாளிகள் பட்டியலாக வருவாய் நிர்வாக ஆணையரால் நிர்யிணத் துள்ள படிவத்தில், புதுக்கோட் டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி பொது மேலாளர் தமிழரசனிடம் வழங்கும் நிகழ்ச்சி கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. இதில் மாவட்ட கலெக்டர் மனோகரன் கலந்து கொண்டு மேலாளர் தமிழரசனிடம் காசோலையை வழங்கினார்.

வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்

இதையடுத்து புதுக் கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் இருந்து தொடர்புடைய தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு உரியத்தொகை இன்று (சனிக்கிழமை) அனுப்பப்படும்.

மேலும் நிவாரணத்தொகை, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பாதிக்கப்பட்ட விவசாயி களின் வங்கி கணக்குகளில் இன்று வரவு வைக்கப்படும். நிவாரணத் தொகை பற்று வைக்கும் பணியானது 20-ந் தேதிக்குள் முடிக்கப்பட்டு விடும் என்று கலெக்டர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் நாக ராசன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) சிதம்பரம், அலு வலக மேலாளர் (பொது) பாலகிருஷ்ணன் உட்பட பலர் உடனிருந்தனர்.

## ஊட்டி மார்க்கெட்டில் இஞ்சி கிலோ ரூ.180&க்கு விற்பனை

ஊட்டி,

ஊட்டி மார்க்கெட்டில் இஞ்சி கிலோ ஒன்றுக்கு ரூ.160 முதல் ரூ.180 வரை விற்பனை செய்யப்படுகி றது. இதனால் விவசாயி கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

இஞ்சி விலை உயர்வு

நீலகிரி மாவட்டத்தில் கூட லூர்- பந்தலூர் தாலுகாவில் இஞ்சி பயிரிடப்பட்டு வருகிறது. தற்போது இஞ்சி சீசன் முடிந்து உள்ளதால் அதன் வரத்து குறைந்து உள்ளது. இதன் காரணமாக ஊட்டி உழவர் சந்தையில் கிலோ ஒன்று ரூ.120 வரை இஞ்சி விற்பனை செய்யப்படுகிறது.

இதுகுறித்து உழவர் சந்தை நிர்வாக அலுவலர் சந்திரன் 'தினத்தந்தி' நிருபரிடம் கூறிய தாவது:- நீலகிரி மாவட்டத் திற்கு தேவைப்படும் இஞ்சிகள் கூடலூர் மற்றும் மைசூர் பகுதிகளில் இருந்து கொள் முதல் செய்யப்படுகிறது.
ஊட்டி உழவர் சந்தைக்கு நாள் ஒன்றுக்கு 150 கிலோ வரை கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. தற்போது இஞ்சி சீசன் முடிந்து உள்ளதால் உழவர் சந்தைக்கு நாள் ஒன்றுக்கு 60 கிலோ மட்டுமே இஞ்சி வருகிறது. இதன் காரணமாக இஞ்சி விலை மள மளவென்று உயர்ந்து உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

விவசாயிகள் மகிழ்ச்சி

ஊட்டி மார்க்கெட்டில் இஞ்சி கிலோ ரூ.160 முதல் ரூ.180 வரை விற்பனை செய்யப் படுகிறது. இதனால் விவசாயி கள் மகிழ்ச்சி அடைந்து உள்ள னர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், நீலகிரி மாவட் டத்தில் கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்து போனதால் கூடலூர் பகுதியில் விவசாய பணிகள் அடியோடு பாதிக் கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் ஊட்டியில் இஞ்சி அதிகளவில் விற்பனை செய்யப்படுவதால் நாங்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.